## *DEPOSITION OF WITNESS*
## IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM

| | | | |
|---|---|---|---|
| **MCOP No. 33/2022** | **நாள் – 21.11.2025** | **சாட்சி – ம.சா.1** | சுதா, க/பெ. பாலகிருஷ்ணன் |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

**2ஆம் எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

நான் விபத்து சமயத்தில் மகேந்திரா வேனில் பயணம் செய்தேன் என்றால் சரிதான். அதில் பயணம் செய்தவர்கள் பெயர்கள் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மொத்தம் ஓட்டுநரை சேர்த்து 22 நபர்கள் பயணம் செய்தோம் என்றால் குழந்தைகளை சேர்க்காமல் 16 அல்லது 17 பேர் பயணம் செய்தோம். முதல் தகவல் அறிக்கையில் ஓட்டுநரை சேர்ந்து மொத்தம் 22 நபர்கள் பயணம் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றிதெரியவில்லை. வேன் ஓட்டியவருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா இல்லையா என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியவில்லை. வேன் ஓட்டியவருக்கு ஓட்டுநர் உரிமம்இல்லைஎன்று ம.சா.ஆ. 3 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கு இந்த விபத்தில் எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2ல் எனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து குறிப்புகள் எதுவும் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. வேன் போய் கொண்டு இருந்த போது மாடு குறுக்கே வந்ததா என்றால் இல்லை. விபத்து நடந்தது நடுராத்திரி 1 மணி என்றால் சரிதான். நாங்கள் சென்ற வேனில் கும்பலாக 21 நபர்கள் பயணித்தது தான் காரணம் என்றால் சரியல்ல. வேனில் அனுமதிக்கப்பட்ட நபர்களை தவிர கூடுதல் நபர்கள் பயணித்தாலும், அதை ஓட்டிய ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை

என்பதாலும், 2ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு எவ்வித இழப்பீடும் வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2025.11.21 15:00:14 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*